


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.09.2023) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பு மாற்று தினம் நிகழ்ச்சியினை தலைமையேற்று நடத்தி, கொடையாளர்களின் குடும்பத்தினருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னை பெருநகர காவல்துறை இணை ஆணையர் அபிஷேக் திக்சித், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், பேராசிரியர் மரு.ரேலா, கர்நாடகம், தெலுங்கானா, அந்தமான் நிக்கோபார், புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சார்ந்த உறுப்பு மாற்று ஆணையத்தின் அலுவலர்கள், மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவத்துறை பேராசிரியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய சார்பில் சென்னையில் உறுப்புதான நிகழ்ச்சி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, செப்.24-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம் மற்றும் பிரதம மந்திரி மக்கள்ஆரோக்ய திட்டத்தின் ஆண்டு விழா 2023 நிகழ்ச்சியினை தலைமை ஏற்று நடத்தினார்கள். அதன்பிறகு தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்புதான தினம் நிகழ்ச்சியினை தலைமையேற்று நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் திங்கள் 23 ஆம் தேதி 2008 ஆம் ஆண்டுக்குப்பிறகு உறுப்பு தானம் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று உறுப்பு தானம் தினம் மிகச் சிறப்பாக நடைபெற்று இருக்கின்றது. மூளைச்சாவு அடைந்து உறுப்பு தானம் செய்த கொடையாளர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மேலும் தமிழ்நாடு மாநிலம் உறுப்பு தானம் வழங்குவதில் இந்திய அளவில் முதலிடத்தில் இருக்கின்றது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உறுப்பு மாற்று மூலமாக ஏராளமானவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். ஆகையால் இன்றைய தேதி வரை உறுப்பு வேண்டி காத்திருப்பவர்கள் சிறுநீரகம் வேண்டி காத்திருப்பவர்கள் 6,179 பேரும், கல்லீரல் வேண்டி காத்திருப்பவர்கள் 449 பேரும், இதயம் வேண்டி காத்திருப்பவர்கள் 72 பேரும், நுரையீரல் வேண்டி காத்திருப்பவர்கள் 60 பேரும், இதயம் மற்றும் நுரையீரல் 24 பேர், கணையம் 1, கைகள் வேண்டி காத்திருப்பவர்கள் 26 பேர் என்கின்ற வகையில் காத்திருக்கின்றனர். ஆகையால் இந்த நிகழ்ச்சியில் உறுப்பு தானம் தினத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மூளைச் சாவு அடைந்தவர்களிடமிருந்து உறுப்புகளை தானமாக பெறுவதற்கு அமைக்கப்பட்ட மூளைச் சாவு அடைந்தவர்களிடம் உறுப்புகளை பெறும் குழு விரைந்து செயல்படுவதன் அவசியம் குறித்தும் இன்றைய நிகழ்ச்சியில் விரிவாக பேசப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டம்**

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உயர் அறுவை சிகிச்சைகள் தொடர்பான நிகழ்ச்சியும் நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு காப்பீட்டு திட்டம் பெரிய அளவில் இருக்கின்றது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்த துறையில் இன்னொரு மிகச் சிறந்த திட்டத்தினை அறிவித்துருக்கிறார்.

உறுப்பு தானம் தருகிற மூளைச் சாவு அடைந்த உறுப்பு தானம் தந்தவர்களுடைய இறுதி சடங்கில் அரசு மரியாதை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்களது உடலடக்கம் அரசு மரியாதையுடன் செய்யப்படும் என்கின்ற மிகப்பெரிய மனிதாபிமானம் அடிப்படையில் நேற்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். ஆக இந்த செப்டம்பர் மாதம் 23 என்பது மனிதாபிமானத்திற்கும், மனித நேயத்திற்கும் பெரிய உச்சத்தை தொடும் நாளாகும். அந்தவகையில் தமிழ்நாடு முழுவதிலும் இனிமேல் மூளைச்சாவு அடைந்தவர்கள் உடலுறுப்பு தானம் செய்தால் அந்த உடல்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு மரியாதை செய்யப்படவிருக்கிறது. மேலும் அக்டோபர் 2008 முதல் தற்போது வரை மொத்த உறுப்பு கொடையாளர்கள் எண்ணிக்கை 1,726 ஆகும். மொத்த முக்கிய உறுப்பு பயன்பாடுகளின் எண்ணிக்கை 6,327. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த இரண்டரை ஆண்டுகளாக மொத்த உறுப்பு கொடையாளர்கள் 313 பேரும், மொத்த முக்கிய உறுப்பு பயன்பாடு 1,242 என்கின்ற எண்ணிக்கையில் இருக்கின்றது.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (23.09.2023) திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள புரட்டாசி மாத வைணவத் திருக்கோயில் ஆன்மிகச் சுற்றுலாவினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் ஆணையர் க.வீ.முரளீதரன், இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஐ.முல்லை மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### 6 வது மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் தலைமையில்

# கொளத்தூர் தொகுதியில் மாநகராட்சி ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்குகின்றனர்!

சென்னை, செப். 24 -

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் தொகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநகராட்சி ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (25.9.2023 திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு, கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தலைமைச் செயற்குழு உறுப்பினர், 6 வது மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி மற்றும் கே.சந்துரு, தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், எஸ். தனசேகர், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், சுதா தீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் எம்.தாவுத்பீ, கே.சாரதா, யோகபிரியா தனசேகர், பி.அமுதா பொன்னிவளவன், சி.ஸ்ரீதணி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் மாநகராட்சி ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம். விஜயகுமார், கே.எஸ்.எம். நாதன், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதி இளம் சுருதி, ஆர்.வரதன், வே.உமாகாந்த்,

கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் பி.பழனி, இளா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எல்.டி.தாமஸ், இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி. வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் பி.ஊமைதுரை, பி.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.ரவி, ப.அன்பரசு, டி.சந்திரசேகர், எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி, எம்.டி. தமிழ்செல்வன், செ.முருகன், என்.சௌந்தர்ராஜன், என். பவுல்ராஜ், என்.ராமச்சந்திரன் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மண்டலக்குழு நிலைக்குழு தலைவர்கள், பகுதி கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், சென்னை கிழக்கு மாவட்ட மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

68 வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன் மணி நன்றி கூறுகிறார்.

### நல உதவிகள் வழங்கி - கழக அரசின் சாதனைகளை விளக்கி கொண்டாடுவோம்!

# கழக நெசவாளர் அணி சார்பில் - கலைஞர் நூற்றாண்டு விழா!

## மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர்கள் க. பொன்முடி - ஆர்.காந்தி - அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்பு! நன்னியூர் ராஜேந்திரன் தலைமை! ஓ.ஏ.நாகலிங்கம் வரவேற்புரை!

சென்னை, செப். 24-

திராவிட முன்னேற்றக் கழக நெசவாளர் அணியின் மாவட்ட, மாநகர, தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம் 12.09.2023 செவ்வாய்க்கிழமை அன்று சென்னை, தியாகராயர்நகர், அகார்டு ஓட்டலில் காலை 10.30 மணியளவில் மாநில நெசவாளர் அணியின் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில், மாநில நெசவாளர் அணியின் துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட மாநில நெசவாளர் அணியின் செயலாளர்கள் எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி. தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்துரவிச்சந்திரன், துணை செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், மணிமாறன். கோவிந்தசாமி. ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, தனது உரையில் கழக அரசின் சாதனைகள் குறித்தும், மகளிருக்கு முன்னுரிமை அளித்து அரசு செய்து வருகின்ற சாதனைகள் விளக்கியும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிபெற நெசவாளர் அணியினர் பாடுபட வேண்டுமெனவும் பேசினார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தனது உரையில் 1953 முதல் கழகம் நெசவாளர்களுக்கு எவ்வாறு எல்லாம் துணை நின்று வருகின்றது என்று விளக்கமாகப் பேசினார்.

கைத்தறித் துறை மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தனது உரையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் நெசவாளர்களுக்குச் செய்த சாதனைகள், தற்போது முதல்வர் அவர்கள் நெசவுத் துறைக்குச் செய்கின்ற சாதனைகளைப் பட்டியலிட்டு விவரமாகப் பேசினார்.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு நன்றியுரை ஆற்றினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நலத்திட்டங்கள் வழங்கியும், கழக அரசின் சாதனைகளை விளக்கியும், அனைத்து மாவட்டங்களிலும் நெசவாளர் அணி சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் கும்பகோணம் ஆகிய 5 மண்டலங்களிலும் நெசவாளர்களின் கைவண்ணத்தில் நெசவு செய்த பொருட்களை வைத்து விற்பனை மற்றும் வர்த்தகக் கண்காட்சியை நவம்பர், 2023 மாதத்தில் சிறப்பாக நடத்திடுவது எனவும்,

அதேபோன்று நெசவுத் தொழில் அதிகமாக நடைபெறும் திருவள்ளூர், ஈரோடு, இராமநாதபுரம், கோயம்புத்தூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஒரு இடத்தைத் தேர்வு செய்து தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், நவீன நெசவு தொழில்நுட்பங்கள், கழிவுகளைக் கையாளுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து விழிப்புணர்வு முகாம்களை 2023 டிசம்பர் மாதத்திலும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆலோசனைப்படி நடத்திடுவது எனவும்,

விழிப்புணர்வு முகாம் நடைபெறும் பகுதிகளில் தமிழக நெசவுத் தொழில் வளர்ச்சியில் கழக அரசின் பங்கு என்ற தலைப்பில் கழக பேச்சாளர்களைக் கொண்டு கருத்தரங்கங்கள் நடத்திடுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக, கண்காட்சி நடைபெறும் இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நெசவாளர்கள் மற்றும் நெசவுத்தொழில் வளர்ச்சிக்காக செய்த நலத் திட்டங்களை விளக்கும் படங்கள் வைக்கப்பட்டு, கழக அரசின் நெசவாளர்களுக்கான எதிர்கால திட்டங்களான ஜவுளி நகரம், ஜவுளிப்பூங்காக்கள் குறித்த காணொலி படங்கள் காட்சிப்படுத்துதல் எனவும், கண்காட்சியில் கலந்துகொள் பவர்கள் பிளாஸ்டிக்கை தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த பருத்தி துணிப்பைகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் “மீண்டும் மஞ்சப்பை திட்டத்திற்கு” வலுச்சேர்க்கும் விதமாக பருத்தி நூலில் நெசவு செய்யப்பட்ட பைகளில் கலைஞர் நூற்றாண்டு இலச்சினை பொறித்து வழங்கிடுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

நெசவாளர் அணியின் செயல்பாடுகள் மேம்பட மாவட்ட, மாநகர அளவில் நிர்வாகிகளை நியமனம் செய்த கழகத்தலைவர், அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்ற அதே நேரத்தில், புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள மாவட்ட மாநகர நெசவாளர் அணி நிர்வாகிகளுக்கு மாநில நெசவாளர் அணி வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தமிழ்ச் சமூகத்தினரின் பங்கு மகத்தானது!

# இந்தியாவின் விண்வெளித் திறன் உலகின் பாராட்டைப் பெற்றுள்ளது!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் பேச்சு!



புதுடெல்லி, செப். 24 -

இந்தியாவின் விண்வெளித்திறன் உலக நாடுகளின் பாராட்டைப் பெற்றுள்ளது என்பதோடு, இதில் தமிழ்ச் சமூகத்தினரின் பங்கும் மகத்தானது என்று மக்களவையில் கழக உறுப்பினர் வேலூர் டி.எம்.கதிர்ஆனந்த் பேசுகையில் குறிப்பிட்டார்.

சந்திரயான் 3 திட்டத்தின் மகத்தான வெற்றி குறித்து நாடாளுமன்ற மக்களவையில் 21/09/23 நடைபெற்ற விவாதத்தில் வேலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தி.மு.க. சார்பில் கலந்துகொண்டு பேசியது வருமாறு:

இன்று இந்த ஜனநாயகக் கோவிலில் இந்தியாவுக்கு மட்டுமல்ல; அனைத்து மனித இனத்திற்கும் வெற்றியைக் கொண்டாடுவதற்காக நாங்கள் இங்கு கூடியுள்ளது பெரு மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆம், சந்திரயான்3 பணியின் வெற்றி இந்திய திருநாட்டின் ஒரு மகத்தான மைல்கல், மேலும் தமிழர்கள் என்ற பெருமையுடன்; விண்வெளி ஆய்வுத் துறையில் நமது இந்திய நாட்டின் சாதனைகளில் இரட்டிப்பு மகிழ்ச்சியும் பெருமையும் உள்ளது.

பல்வேறு துறைகளில் முன்னோடியாகத் திகழ்ந்த தமிழ் மக்கள் வளமான வரலாற்றைக் கொண்டுள்ளனர். இன்று விண்வெளியில் இந்தியா மேற்கொண்டுள்ள முன்னேற்றங்களில் அதே உணர்வு பிரதிபலிப்பதைக் காண்கிறோம்.

எங்கள் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பலர் இந்த மகத்தான முயற்சியின் ஒரு பகுதியாக இருந்து அவர்களின் நிபுணத்துவம் அறிவு மற்றும் ஆர்வத்துடன் பங்களித்துள்ளனர்.

நமது பண்டைய தமிழ் இலக்கியம் கவிதை அழகு நடையில் பஞ்சபூதங்கள் அதாவது நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம் ஆகியவற்றைப் பற்றி பேசுகிறது. இந்த ஐந்தையும் வென்று எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த செயல்களைச் செய்யும் திறன் மனிதனுக்கு மட்டுமே உள்ளது.

இன்று நம் முன்னோர்கள் கதை வசனங்களில் எழுதிய கனவுகள் இப்போது நட்சத்திரங்களை அடையும்போது நனவாகி வருவதைப் பார்க்கும்போது நம் இதயங்களை மகிழ்ச்சியில் நிரப்புகிறது.

சந்திரயான் 3 இன் பயணம் சந்திரனை அடைவது மட்டுமல்ல; கனவு காணத் துணிந்த எண்ணற்ற மனங்களின் பயணத்தையும் பற்றியது. இது இந்தியாவின் கூட்டு மனப்பான்மை மற்றும் தமிழ்ச் சமூகம் இந்த துடிப்பான திரைக்கு சேர்க்கும் சிறப்புத் தொடர்பைப் பற்றியது.

கருத்தியல்ரீதியாக நாடுகள், மக்கள் பிளவுபட்டிருப்பதை அடிக்கடி பார்க்கும் உலகில், இந்தியாவின் விண்வெளித் திறனைப் பாராட்டுவதற்கு உலகெங்கிலும் உள்ள மக்கள் ஒன்றிணைவதைக் காண்பது மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

சந்திரயான் 3 பணி நமது ஒரே இயற்கை செயற்கைக் கோளான சந்திரனைப் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்தியது மட்டுமல்லாமல் விண்வெளி ஆய்வுக் கலையில் நாம் எவ்வளவு தூரம் வந்துள்ளோம் என்பதையும் இது காட்டுகிறது.

‘சந்திரயான்’ என்ற பெயர் ‘மூன்கிராஃப்ட்’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பெயர் குறிப்பிடுவது போலவே, இந்த சந்திர ஆய்வானது இந்தியாவின் கையொப்பத்தை சந்திரனின் மேற்பரப்பில் செதுக்கும் கருவியாக உள்ளது. மாணவச் செல்வங்கள் உட்பட நமது எதிர்கால சந்ததியினரை இன்னும் பெரிய கனவு காண தூண்டுகிறது.

அத்தகைய வெற்றியின் விளைவுகள் பன்மடங்கு. சந்திரனைப் படிப்பதன் மூலம் நாம் பெறும் விஞ்ஞான அறிவிற்கு அப்பால் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் சுகாதாரம் மற்றும் தகவல் தொடர்பு முதல் போக்குவரத்து மற்றும் அதற்கு அப்பால் பல்வேறு துறைகளுக்கு பயனளிக்கும். மேலும் இது உலகளாவிய விண்வெளி சமூகத்தில் இந்தியாவின் முன்னணி நிலையை பலப்படுத்துகிறது. மேலும் வரும் ஆண்டுகளில் இன்னும் அதிக லட்சிய முயற்சிகளுக்கு வழி வகுக்கும்.

சந்திரயான்3 திட்டத்தை அற்புதமாக வெற்றியடையச் செய்வதற்கு பங்களித்த ஒவ்வொரு நபரையும் சீரும் சிறப்புடன் பாராட்டுவோம். அவர்களின் அயராத முயற்சியாலும் தூக்கமில்லாத இரவுகளாலும் இணையற்ற பேரார்வத்தாலும், புது நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் நட்சத்திரங்களை நோக்கிப் பார்க்கிறோம்.

சந்திரயான் 3 திட்டம் இந்தியாவின் வெற்றிக் கதை மட்டுமல்ல முழு உலகிற்கும் உத்வேகத்தின் கலங்கரை விளக்கமாகும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### கலைஞர் நூற்றாண்டு விழா! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையேற்று நலஉதவிகள் வழங்குகிறார்!

# புழல் ஒன்றியத்தில் பொதுக்கூட்டம் ! முனைவர் சபாபதி மோகன் சிறப்புரை !

## ஒன்றியச் செயலாளர் - வழக்கறிஞர் புழல் பெ. சரவணன் - ஊராட்சி மன்றத் தலைவர் ச.பாரதி சரவணன் முன்னிலை!

சென்னை, செப். 24-

சென்னை வடகிழக்கு மாவட்டம் - புழல் ஒன்றிய தி.மு.க. சார்பில் விளாங்காடு பாக்கம் ஊராட்சியில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக் கூட்டமும், நல உதவிகள் வழங்கும் விழாவும் நடைபெறுகிறது.

இன்று (24.9.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் கண்ணம் பாளையத்தில் நடைபெறும் இவ்விழாவில் - புழல் ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் பெ. சரவணன், ஊராட்சித் தலைவர் ச.பாரதிசரணவன், ர.செல்வமணி, என்.கலாவதி நந்தகுமார், வே.பாரதி, ஜி.காமராஜ்,ஜி.நீலகண்டன், டி.நித்தியானந்தம், ஜெ.தங்கராஜன், ஆர்.மல்லியார், டி.டில்லியார், வெ.கோவிந்தராஜ், பி.பரிமளா செல்வம், டி. நாகராஜ், சு.தனஞ்செழியன், ஏ.சீனு, ஏ.வி.அருண், எஸ்.ராமு, ஆ.சதிஷ், டி. வெங்கெட், எஸ்.தனுஷ், எம்.செந்தில், தர்மி ரவி, ஏ.எல்.மாரி, நிலவழகி, இனியன், ரதி, சீனிவாசன், கே.சத்தியசீலன், ஆனந்தி நாகராஜன், அருணாதேவி சீனு, எம்.பிரகாஷ், சி.ஜெயகுமார், கே.தன்ராஜ், எம்.செல்வராஜ், கே.பி.முனுசாமி, கே.கதிரவேல், பி.தேவன், ஜெ.பொன்னன், ஜி.வெங்கடேசன், ஜி.திருமலை, எஸ். அன்பு, பி.முனுசாமி, பி. கோபி, எம்.கிருஷ்ண மூர்த்தி, இ.முருகன், எஸ்.குமார், எஸ்.இளவரசன் உள்பட பலரும் வரவேற்கின்றனர்.

செங்குன்றம் பேரூர்ச் செயலாளர் ஜி. இராஜேந்திரன், ஜெ.ஜெய்மதன், தங்கமணி திருமால், சாந்தி பாஸ்கரன், கே.தமிழரசி குமார், ஆர்.முருகன், இராஜேஸ்வரி, எத்திராஜ், எம்.அண்ணாதுரை, ஆர்.வெங்கடேசன், நா.ஜெகதீசன், சி.அற்புதராஜ், மு.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஏராளமான நலஉதவிகள் வழங்குகிறார்.

கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் பேராசிரியர் - முனைவர் இரா.தி.சபாபதி மோகன் சிறப்புரையாற்றுகிறார்.

பா.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, பாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன், என். பரந்தாமன், டி.எ.ராஜி, இரா.முருகேசன், பி.சாந்தி, தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், ஜி.துக்காராம், எஸ்.நந்தகோபால், புழல் எம்.நாராயணன், வை.ம. அருள்தாசன், மீ.வே.கர்ணாகரன், மேரை ஜி.தயாளன், எஸ்.ஏ.சீனிவாசன், ஆர்.டி.மதன்குமார், ஜி.கே.இனியன், மோரை சதிஷ், ஆர்.இ.ஆர்.விப்ர நாராயணன், இரா.ஏ.பாபு, வி.திருமால், பி.நந்தகுமார், இ.தமிழரசு, என்.ராமு, ஆர். எம்.தமிழ்செல்வி ரமேஷ், என்.ஜானகிராமன், ஆஷா கல்விநாதன், பி.சிவக்குமார், தெய்வானை கபிலன், இ.பாஸ்கரன், என்.எம்.டி. கோபால், சி.ஏழுமலை, வி.பாரதி, ஜெ.தங்கராஜன், ஜி.காமராஜ், மல்லிராஜா, வடகரை விஜி, மா.மணி, இரா.கர்ணா, ஜெ.ரவிக்குமார், ஆர்.டி.குமார், வி.முரளி, அ.டில்லிபாபு, பி.கல்விநாதன், எஸ்.குணசேகரன், ஆர்.கணேசன், ஆர்.நாகராஜ், கே.கபிலன், தனலட்சுமி வாசுதேவன், எஸ்.கார்த்திக், சி.மனோகரன், டி.அருணகிரி, ஆர்.ஸ்டாலின், ஜெ. முருகன், டி.ஜனார்த்தனம், கலைவாணன், அரி பிரபா, ராமச்சந்திரன், ஜி.தினேஷ், சி.சுதாகர், இ.ஞானசேகரன், ஜி.மேகநாதன், எம்.செல்வகுமார், யு.பிரேம்குமார், எம்.பிரேம்குமார், க.இளையசூரியன், ஆர்.அய்யப்பன், எஸ்.அஷ்வின், பா.விமல் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

வே.பாரதி, ஜி.காமராஜ், கே.அஜித்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**டி.கே. பழனிச்சாமி**

**செப்டம்பர் 24 (2000)**



திருவெற்றியூர் நகரக் கழகச் செயலாளராகவும், நகராட்சி மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்.

‘கழகத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஓடியாடி உழைத்த உடன்பிறப்பு’ என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**